2. சிறப்புக் கவன ஈர்ப்பு

சென்னைக்கு அருகில் பரந்தூரில் பசுமை வளாக விமான நிலையம் அமையவுள்ளமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சென்னைக்கு அருகில் பரந்தூரில் இரண்டாவது விமான நிலையம் அமையவிருப்பது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தி. வேல்முருகன், திரு. மு. ஜெகன் மூர்த்தி, திரு. கு. செல்வபெருந்தகை, திரு. ஜி.கே. மணி, திரு. வி.பி. நாகைமாலி, திரு. மா. சின்னதுரை, திரு. ட்டி. இராமச்சந்திரன் மற்றும் திரு. K. மாரிமுத்து ஆகியோர் விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு)*

முற்பகல் 11-10

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது முடிந்ததற்குப் பிறகு உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன், நீங்கள் உட்காருங்கள்.*

3. தகவல் கோரல்

கிள்ளியூர் தொகுதி, ஆத்தங்கோடு, கிருஷ்ணமாயா வித்யாலயா உயர்நிலைப் பள்ளி, மாணவன் உயிரிழந்தமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி, முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், மெதுகும்மல் ஊராட்சிப் பகுதியில், ஆத்தங்கோடு என்கிற ஊரில் செயல்பட்டு வரும் கிருஷ்ணமாயா வித்யாலயா உயர்நிலைப் பள்ளியில் கடந்த மாதம் 24 ஆம் தேதி அன்று, பள்ளி வளாகத்திற்குள் குளிர்பானத்தில் ஆசிட் கலந்து ஒரு*

[திரு. செ. ராஜேஷ் குமார்] [2022 அக்டோபர் 19

மாணவன் கொடுத்ததை அஸ்வின் என்கிற மாணவன் குடித்து, உடல்நிலை சரியில்லாமல் நெய்யாற்றிகராவில் உள்ள நிம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி கடந்த 17-10-2022, திங்கட்கிழமை அன்று மரணமடைந்திருக்கிறார். இவ்வளவு நாட்களாகியும் அந்தக் கொலைக் குற்றத்திற்குக் காரணமான, மாணவன் மரணமடைந்ததற்குக் காரணமான அந்த நபர்களைக் காவல் துறை இன்னும் கண்டுபிடிக்கவில்லை. எனவே, தவறு செய்தவர்கள் உடனடியாக கண்டுபிடிக்கப்பட வேண்டும். அந்தப் பள்ளி தமிழக அரசின் அனுமதியில்லாமல் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகையால், அந்தப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களை, பக்கத்தில் இருக்கின்ற அரசுப் பள்ளிகளில் சேர்ப்பதற்கான நடவடிக்கையையும் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்தக் குடும்பத்திற்கு அரசின் சார்பாக 50 இலட்சம் ரூபாய் வழங்க வேண்டுமென்று கேட்டு, தங்கள்மூலமாக கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எழுப்பிய இந்தக் கவன ஈர்ப்பு நிகழ்வு என்பது உண்மைதான். இது கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முஞ்சிறை என்கிற ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு தனியார் பள்ளியில் நடந்த சம்பவம்; அதைப் பள்ளி என்றுகூட சொல்ல முடியாது. இந்தச் சம்பவத்தைப் பத்திரிகையில் பார்த்த பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கு என்ன நடந்தது, அந்தப் பள்ளி தமிழக அரசின் கட்டுப்பாட்டில் வருகிறதா அல்லது ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் வருகிறதா அல்லது சுய உதவி பெறுகின்ற பள்ளியா, அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறதா உள்ளிட்ட கேள்விகளைத்தான் தொடர்ந்து என்னிடம் கேட்டுக்கொண்டே வந்தார்கள். அதுமட்டுமல்லாமல், பாதிக்கப்பட்ட மாணவனின் உடல்நிலை எப்படி இருக்கிறது என்பதையும் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் கேட்டுக்கொண்டேதான் இருந்தார்கள். அந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில், NIOS என்று சொல்லக்கூடிய

2022 அக்டோபர் 19] [திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி]

தேசிய திறந்தவெளிப் பள்ளியாக அது இருக்கிறது. அந்தப் பள்ளிக்கு *2020* ஆம் ஆண்டுவரைதான் ஒன்றிய அரசால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்பது CEO-வின் random inspection-ல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நம்முடைய தமிழக அரசின் கட்டுப்பாட்டில் அந்தப் பள்ளி இல்லையென்று சொன்னாலும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது; நமக்கு சம்பந்தம் இருக்கிறதோ இல்லையோ, அங்கு படிக்கின்ற மாணவன் நம்முடைய மாநிலத்தைச் சார்ந்தவன். ஆகவே, உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் சொன்னதுபோல், அங்கே படித்துக்கொண்டிருக்கின்ற மாணவர்களை அருகில் இருக்கின்ற அரசுப் பள்ளியிலோ அல்லது C.B.S.E. பள்ளியிலோ சேர்ந்துகொள்ளுங்கள் என்று நாங்கள் சொன்னபோது; இல்லை, நாங்கள் C.B.S.E. பாடமுறையில்தான் படித்துக்கொண்டிருக்கிறோம் என்று அவர்கள் தெரிவித்ததன் அடிப்படையில், பக்கத்திலுள்ள N.M.C.B.S.E. பள்ளியில் மீதம் இருக்கின்ற மாணவர்களை நாங்கள் சேர்த்திருக்கின்றோம். அதுமட்டுமல்லாமல், அவர்களின் பெற்றோர்கள் மாவட்ட ஆட்சியருக்கும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். மாண்புமிகுமுதலமைச்சர் அவர்களின் உத்தரவுபடி எங்களுடைய CEO மூலம் அறிக்கை ஒன்றையும் நாங்கள் வாங்கியிருக்கின்றோம். அதுமட்டுமல்லாமல், இது complaint என்று வரும்போது காவல் துறை கட்டுப்பாட்டுக்குப் போய்விடும். காவல் துறையினரும் இன்றைக்கு உடனடியாக FIR பதிவு செய்திருக்கிறார்கள். அவர்கள் சொல்வது என்னவென்றால், அஸ்வின் என்கிற அந்த மாணவன், *12-30* மணி அளவில் restroom-க்கு சென்றிருந்தபோது யாரோ ஒருவன் uniform போட்டுக்கொண்டு வந்து Coca-cola-வில் ஆசிட் கலந்து கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. அது யார் என்று கண்டுபிடிக்கின்ற பணியில் நம்முடைய காவல் துறை முழுமையாக ஈடுபட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் சில கருத்துகளைச் சொன்னார்; இழப்பீட்டையும் கேட்டார். இவற்றையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்வோம். பொதுவாக, இதுபோன்ற நிகழ்வுகள் பள்ளிகளில் நடக்கும்போது, CBCID-க்கு உடனடியாக நாங்கள் மாற்றி உத்தரவிடுவோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே தெரிவித்திருக்கின்றார்கள். இதுவும் அதற்குப் பொருந்துகின்றவகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி][2022 அக்டோபர் 19

உடனடியாக அதற்காக உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, இதுகுறித்து கவலைப்பட வேண்டாம். அது எந்தப் பள்ளியாக இருந்தாலும், ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பள்ளியாக இருந்தாலும், நம்முடைய மாநில மாணவர் என்கிற முறையில், அவர் உயிரிழந்ததற்கு யார் காரணமாக இருந்தாலும் அவர்கள்மீது, அந்தப் பள்ளியின்மீது அரசின் சார்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. சிறப்புக் கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

சென்னைக்கு அருகில் பரந்தூரில் பசுமை வளாக விமான நிலையம் அமையவுள்ளமை-*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

முற்பகல் 11-15

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசின் புதிய விமான நிலையம் அறிவிப்பின்கீழ்—குறிப்பாக Greenfield விமான நிலையம்—சென்னைக்கு அருகில், பரந்தூரில் அமைப்பதற்கான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. அதற்காக நம்முடைய தமிழ்நாடு அரசு நிலத்தைக் கையகப்படுத்தி ஒன்றிய அரசிற்குத் தருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதற்கான அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறது. குறிப்பாக, இந்த நிலத்தைக் கையகப்படுத்துகின்றபோது விவசாய நிலங்களைத் தவிர்த்து ஏனைய இடங்களை இதுபோன்ற வளர்ச்சித் திட்டத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று 2013-ல் ஒன்றிய அரசு இயற்றிய சட்டத்தின் உட்பிரிவு 10 மிகத் தெளிவாகக் கூறுகிறது. ஆனால், அதைக் கருத்தில்கொள்ளாமல் 200, 300 ஆண்டுகளுக்கு மேலாக அந்த நிலத்தை நம்பி வாழ்கின்றார்கள் விவசாய மக்கள். குறிப்பாக, 4,663 ஏக்கர் நிலம் இதற்காகக் கையகப்படுத்துகின்றபோது இதில் 2,666 ஏக்கர் நிலம் விவசாய நிலங்களாக இருக்கின்றன. அந்தப் பகுதியினுடைய உணவுத் தேவைகளை முற்றும் முதலுமாகப் பூர்த்தி செய்கிற ஒரு நிலப் பகுதியாக அது இருக்கிறது. அப்பகுதியில் வாழ்கின்ற கிராம விவசாயிகள் அன்றாடக் கூலிகளாகவும், விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மக்களாகவும், ஆடு, மாடு, கோழி உள்ளிட்ட கால்நடைகள் வளர்ப்பு போன்றவற்றை